பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 02 2025 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. நாட்டின் பொருளாதாரத்தோடு மக்களின் வருமானமும் அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பட்ஜெட் உரையின்போது, பணவீக்கத்தை குறைப்பது குறித்து மத்திய அரசு அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை என்று காங்கிரஸ் குறை கூறியுள்ளது.

3. சுகாதாரத்துறையில் தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிப்பதற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

4. பாலஸ்தீனியத்தில் உள்ள **Tammun** நகரத்தையடுத்து மேலும் நான்கு இடங்களில் தாக்குதல் நடத்த இருப்பதாக இஸ்ரேலிய ராணுவம் கூறியுள்ளது.

5. டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்தியா உலக ப்ளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

தில்லியில் ஆம் ஆத்மி அரசு வளர்ச்சிப்பணிகள் எதையும் மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

தில்லியில் உள்ள ஆர் கே புரத்தில் இன்று நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் பேசிய அவர், ஆம் ஆத்மி கட்சி விரக்தியில் இருப்பதாகவும், அதன் காரணமாக தவறான அறிவிப்புகளை வெளியிட்டு வருவதாகவும் கூறினார்.

நடுத்தர மக்களை காக்கும் வகையில், மத்திய பட்ஜெட்டில் வருமானவரி விலக்கிற்கான உச்சவரம்பு 12 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் உலக அரங்கில் பத்தாவது இடத்தில் இருந்து, ஐந்தாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தோடு மக்களின் வருமானமும் அதிகரித்து வருவதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அஷ்வினி வைஷ்ணவ், தில்லியின் நல்லிணக்கம், கலாச்சாரம் மற்றும் வரலாற்று பாரம்பரியம் விரைவில் புத்துயிர் பெறும் என்று தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவரான திருமதி பிரியங்கா காந்தி, சீமாபுரியில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் இன்று பங்கேற்று பேசினார்.

நடப்பு பட்ஜெட் உரையின்போது, பணவீக்கத்தை குறைப்பது குறித்து மத்திய அரசு அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை என்று அவர் தெரிவித்தார்.

மக்கள் நலனில் அக்கறையின்றி மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திருமதி பிரியங்கா காந்தி குற்றம் சாட்டினார்.

**<<<<<<>>>>>**

கலாச்சாரம், ஆன்மிகம், நாகரீகம் மூலமாக இந்தியாவும், இந்தோனேஷியாவும் பிணைக்கப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜகார்த்தாவில் உள்ள ஸ்ரீசனாதன தர்ம ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளும் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நட்புறவை பேணி வருவதாகவும், இந்தோனேஷியாவில் உள்ள **Prambanan** கோவில் போன்றவை நம் நாட்டின் காசி, கேதார்நாத்தை நினைவுபடுத்துவதாக உள்ளன என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

சுகாதாரத்துறையில் தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிப்பதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்முவில் இன்று மேம்பட்ட மரபியல் மற்றும் துல்லிய மருத்துவத்திற்கான மையத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் நாட்டின் உயிரி பொருளாதார வளர்ச்சி பத்து பில்லியன் டாலராக இருந்ததாகவும், தற்போது அது 130 பில்லியன் டாலராக வளர்ச்சி கண்டிருப்பதாகவும் கூறினார்.

இத்துறை சார்ந்து ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட உயிரி தொழில்நுட்ப புத்தாக்க நிறுவனங்கள் தற்போது செயல்பட்டு வருவதாகவும், வருங்காலத்தில் இத்துறையில் 300 பில்லியன் டாலர் வளர்ச்சியை அடைய அரசு இலக்கு நிர்ணயித்திருப்பதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கடற்படை மாரத்தான் போட்டிகளை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

மூன்று பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டியை ராணுவம், கடற்படை, விமானப்படை தளபதிகள் உட்பட பல்வேறு அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக, உடல் பருமனற்ற ஆரோக்கியமான இந்தியா என்னும் தலைப்பில் புதுதில்லியில் நடைபெற்ற சைக்கிள் பயணத்தில் மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று பங்கேற்றார்.

இந்நிகழ்வில் பேசிய அவர், உடல் பருமன் மிகப்பெரிய சவாலாக திகழ்வதாகவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் உணவில் எண்ணெய் பயன்பாட்டை குறைப்பதன்மூலமாக அதனை தவிர்க்க முடியும் என்றும் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 506 கோடி ரூபாயை எட்டியதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டு இதேகாலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில், 12 புள்ளி மூன்று சதவீதம் அதிகமாகும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் மத்திய அரசின் ஜிஎஸ்டி வருவாய் 36 ஆயிரத்து 77 கோடி ரூபாயாகவும், மாநில அரசுகளின் ஜிஎஸ்டி வருவாய் 44 ஆயிரத்து தொள்ளாயிரத்து 42 கோடி ரூபாயாகவும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி வருவாய் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்டதாக அமைந்தது என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

மேலும், **'Cess'**வருவாய் 13 ஆயிரத்து 412 கோடி ரூபாயாக உள்ளது என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதேகாலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில், ஜிஎஸ்டி வருவாயில் அதிகபட்சமாக லடாக் யூனியன் பிரதேசம் 39 சதவீத வளர்ச்சியை கண்டிருப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

மனிதகுல வரலாற்றில் மாபெரும் மக்கள் சங்கமமாக மகா கும்பமேளா திகழ்கிறது என்று நார்வே நாட்டின் முன்னாள் அமைச்சர் திரு **Erik Solheim** தெரிவித்துள்ளார்.

மகா கும்பமேளாவில் பங்கேற்று புனித நீராடிய அவர், தமது சமூக வலைதள பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

கங்கையில் நீராடியபோது தாம் ஆசிர்வதிக்கப்பட்டதாக உணர்ந்ததாக அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, பிரயாக்ராஜில் இன்று அதிகாலை முதல், மாலை நான்கு மணிவரை ஒரு கோடியே 13 லட்சம் பேர் புனித நீராடியதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

வசந்த பஞ்சமியையொட்டி, 400-க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

பிரயாக்ராஜில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களிலும் விரிவான மருத்துவ வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும், 32 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே கூறியுள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>**

பாலஸ்தீனத்தில் உள்ள **Tammun** நகரத்தையடுத்து மேலும் நான்கு இடங்களில் தாக்குதல் நடத்த இருப்பதாக இஸ்ரேலிய ராணுவம் கூறியுள்ளது.

கடந்த வாரம் **Tammun** நகரில் இஸ்ரேலிய துருப்புக்கள் நடத்திய தாக்குதலில் பத்து தீவிரவாதிகள் உயிரிழந்ததாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், தற்போதைய நடவடிக்கைகள் அமைந்துள்ளதாக அது கூறியுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேலிய தாக்குதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 25 பேர் உயிரிழந்ததாக அந்நாடு தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் உலக கோப்பையை வென்ற இந்தியா அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், கூட்டு முயற்சி மற்றும் உறுதியான செயல்பாடுகளுக்கு கிடைத்த வெற்றி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 82 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

இந்தியாவின் **Gongadi Trisha** அபாரமாக பந்துவீசி மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

83 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 11 புள்ளி இரண்டு ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 84 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இதன்மூலம், தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்திய மகளிர் அணி கோப்பையை வென்றுள்ளது.

**<<<<<<>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்தியா உலக ப்ளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தில்லியில் நடைபெற்றுவரும் **Togo** அணிக்கு எதிரான போட்டியின் ஆடவர் இரட்டையர் மற்றும் மாற்று ஒற்றையர் பிரிவிலும் இந்தியா வெற்றிபெற்றது.

இப்போட்டியில் 4-0 என்ற ஆட்டக்கணக்கில் வெற்றிபெற்ற இந்தியா உலக ப்ளே ஆஃப் சுற்றுக்கு தகுதி பெற்றது.

-----------------

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 3.1 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 40 ரன் எடுத்துள்ளது.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

------------

ஈரான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் இஷான் பட்நாகர் - ஸ்ரீநிதி நாராயணன் இணை பட்டம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 16-21, 21-17, 21-14 என்ற செட் கணக்கில், துருக்கியின் **Yasemen Bektas – Emre Sonmez** இணையை வென்றது.

--------------

தேசிய விளையாட்டுப்போட்டியில் தமிழக அணி இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

உத்தராகண்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் கூடைப்பந்து இறுதியாட்டத்தில் தமிழக அணி 79-46 என்ற புள்ளிக்கணக்கில் கேரள அணியை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் பிரிவில் தமிழகம் வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றியது.

------------

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் மனீஷ் சுரேஷ் குமார் வெற்றிபெற்றார்.

<<<<<<END>>>>>